**திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : முனைவர் பு. புனிதவதி எம்.எஸ்.சி., எம்.பில்., பி.எச்.டி.,**

**ந.க.எண் : 509/ஆ/2023, நாள் : 07.07.2025**

**பொருள்:** கல்லூரிக் கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – திரு.ப.வினோத்குமார் - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - 2022-2023 ஆம் ஆண்டிற்கு தொகுதி-IV தேர்வில் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் குறிப்பாணை எண்:453/PSD-B1/2022, நாள்: 04.08.2023.
2. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 35681/பி1/2023, நாள்: 23.11.2023.
3. இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 509/ஆ/2023 நாள்: 29/11/2023.
4. சென்னை கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்: TNDCE/4777/2025-B1 நாள்: 26.06.2025

பார்வை(1)-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் குறிப்பாணை கடிதத்தின் படி, திரு.ப.வினோத்குமார் என்பார் 2022-2023ஆம் ஆண்டிற்கான தொகுதி-IV தேர்வில் தேர்ச்சி பெற்று, நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். பார்வை(2)-ல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, திரு.ப.வினோத்குமார் என்பாருக்கு இக்கல்லூரியில் இளநிலை உதவியளராகப் பணிபுரிய பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை(3)-ல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின் படி தனியர் 29.11.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

பார்வை(4)-ல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணியில் சேரும் பணியாளருக்குத் தேர்வாணையக் கடிதத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, உண்மைத் தன்மையினை சரிபார்த்து கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.இதனைத் தொடர்ந்து பார்வை(3)-ல் காணும் இவ்வலுவலக முதல்வர் அவர்களின் செயல்முறைகளின் படி,திரு.ப.வினோத்குமார், என்பார் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 29.11.2023 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவகாலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலத்திற்குள் பவானிசாகர் பயிற்சித் தேர்வு மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பு. புனிதவதி 07/07/25

முதல்வர்

**முதல்வர்**
**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**ரெட்டியார் சத்திரம் – 624 622,**
**திண்டுக்கல் மாவட்டம்**

நகல்:

1. கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை -15.
2. கல்லூரிக் கல்வி இணை இயக்ககம் -மதுரை-02

உ_பரி-2

சி.மகா 07/07/2025